**மார்ச் – 17**

**"அவனிடத்திலிருக்கிற தாலந்தை எடுத்து, பத்துத் தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள். உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்." - மத் 25 : 28, 29.**

இந்தத் தாலந்தைப் புதைத்தலின் உதாரணமாக, ஏன் ஒரு தாலந்தைப் பெற்றுக் கொண்டவன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறான்? கொஞ்சம் உள்ளவர்களிடத்திலுள்ள பொறுப்பைக் காண்பிப்பதற்காகத்தான். அதாவது, தனது பிரதிஷ்டை செய்த ஜனங்களின் மிகவும் சிறியவனும் தன்னிடம் சொந்தமாக வைத்திருக்கும் தாலந்தை (சந்தர்ப்பங்களை) அறிந்திருக்கவும், உபயோகிக்கவும் கர்த்தர் எதிர்பார்க்கிறார் என்றும், அவருக்கும் அவருடைய சகோதரருக்கும் சத்தியத்துக்கும் ஊழியம் செய்ய தங்களிடம் மிகச் சிறிய திறமையை (சந்தர்ப்பத்தை) உடையவர்களாய் இருந்து அதை உபயோகிக்க அசட்டை செய்கிறவர்களையும் அவர் குற்றமற்றவர்களாக விடார் என்று காண்பிப்பதற்காக.

**-Z '01, 59 (R 2764).**

ஒவ்வொருவருக்கும் ஊழியத்திற்காகத் தங்களுடைய திறமைக்குத்தக்கதாகத் தேவன் கொடுக்கிற சந்தர்ப்பங்களே தாலந்துகள். யார் தங்களுடைய சந்தர்ப்பங்களை உபயோகிக்கத் தவறுகிறார்களோ, அவர்களிடமிருந்து இவைகள் முழுவதும் பிடுங்கிக் கொள்ளப்படும். அப்போது, யார் அவைகளை உபயோகிக்கிறார்களோ, அவர்கள் தங்களுடையதை வைத்துக் கொள்ளுவதோடல்லாமல், கூடுதலாக மற்றவைகளையும் பெறுகிறார்கள். அஜாக்கிரதையாக இருந்தவர்கள் இழந்து விட்டவைகளையும், சேர்த்துக் கிடைக்கிற பொன் போன்ற ஊழியத்தின் சந்தர்ப்பங்களை இப்பொழுதே பற்றிக் கொண்டு உபயோகிக்க, நம்மில் ஒவ்வொருவருக்கும் இது ஒரு எச்சரிக்கையாக இருப்பதாக. **-P '32, 30.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

1கொரி 4:1,2; மத் 13:12; மாற் 4:25; லூக் 8:18; 12:35-38, 42; 16:2; 19:26; 1கொரி 15:10; லேவி 10:1-7; அப் 1:20; மத் 24:45-51; 1பேது 4:10.

**கோபுர வாசிப்பு : Z '06, 315 (R 3869).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் உண்மையுள்ள உக்கிராணக்காரனாயிருந்தேனா? அல்லது உண்மையற்ற உக்கிராணக்காரனாயிருந்தேனா? எப்படி? ஏன்? பலன் என்ன?